திரு. க. மு. இராசகோபால் : தனியார் பள்ளி சரியான இடம் இல்லாமல் இருந்தால் எடுத்துக்கொள்ளலாம் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். காஞ்சீபுரத்தில் வெப்பேடு என்ற இடத்தில் ஒரு தனியார் பள்ளி இருக்கிறது. அதற்கு சரியான இடம் இல்லை. மரத்தடியில் தான் மாணவர்கள் படித்துக் கொண்டிருந்தார்கள். அந்த மரத்தையும் இப்பொழுது வெட்டிவிட்டார்கள். போதுமான இடம் இல்லாததால் அதை அரசாங்கம் ஏற்று நடத்துமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி தனியாக கவனிக்கப்பட வேண்டும்.

ஐந்தாண்டு பட்டப்படிப்பு.

*45 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரிகளில் நான்கு ஆண்டு பட்டப் படிப்பினை ஐந்தாண்டாக மாற்றவேண்டுமென துணை வேந்தர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனரா ?

(இ) அது குறித்து அரசு என்ன கருத்து தெரிவித்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் மட்டும் இந்த கருத்தைத் தெரிவித்துள்ளார்.

(இ) இது இன்னும் அரசின் பரிசீலனையிலுள்ளது.

திரு. என். கிட்டப்பா : இந்த 4 ஆண்டு பட்டப்படிப்பை, 5 ஆண்டு பட்டப் படிப்பாக ஆக்குவதினால் ஏற்பட இருக்கிற சாதகங்களை அரசு அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதுபற்றி கவனித்து அறிக்கை தருவதற்கு அமைக்கப்பட்டிருக்கிற திட்டக் குழுவைச் சேர்ந்தவர்கள் அறிக்கை தந்திருக்கிறார்கள். பள்ளிப் படிப்பு 10 ஆண்டு வைத்துக் கொள்ளலாம். அதற்கு மேல் இரண்டு ஆண்டு வரையில் இண்டர்மீடியட், மேலும் 3 ஆண்டு பட்டப் படிப்பு வைத்துக்கொள்ளலாம் என்று யோசனை சொல்லியிருக்கிறார்கள். பல்வேறு கல்வி நிபுணர்களை வைத்துக்கொண்டு அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கை இப்பொழுது அரசின் பரிசிலனையில் இருந்து வருகிறது. பல பல்கலைக்கழகத் துணை வேந்தர்களையும் கலந்துகொண்டு தக்க நடவடிக்கை எடுக்க அரசு முயலும்.

திரு. கே. கந்தசாமி : இன்று நாட்டில் அதிகமாக பட்டப் படிப்புகள் கலைத்துறையில் படித்து இருந்தும், வேலையில்லா திண்டாட்டம் அதிகமாக வளர்ந்து வருகிற காரணத்தினால், இந்த ஐந்தாண்டு கோர்ஸ் வரையிலே உள்ள நிலையைப் பார்க்கிறபொழுது, அதைத் தொழில் நுணுக்க கல்வித்

1972 டிசம்பர் 6]

துறையாக மாற்றி, மாணவர்களுடைய ஆப்டிடியூட் என்று சொல்லப் படுகிற விருப்பத்திற்குத் தகுந்த முறையில் தொழில் துறையில் தொழில் கல்வியை வளர்க்க உள்ள வாய்ப்பை அதிகரிக்க அரசு முயற்சி ஏதும் மேற் கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பல்வேறு வகையில் தொழில் நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 8-வது வகுப்போடு நிறுத்துபவர்களுக்கு ஐ.டி.ஐ.யில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 10-வது வகுப்பு வரையில் பள்ளிப்படிப்பு படித்தவர்களுக்கு பாலிடெக்னிக் என்ற அளவுக்கு 33, 34 பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. அதற்குப் பிறகு பொறி இயல் கல்லூரிகள் இருக்கின்றன. தொழில் நுட்ப அறிவைத் தருவதற்காக இவையெல்லாம் ஆங்காங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

பைஃபர்கேடட் கோர்ஸ் என்ற முறையில் தொழில் நுட்ப அறிவு தருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்தந்தப் பகுதியினுடைய தேவைக்கேற்ப கலைக் கல்லூரிகள் எந்த அளவுக்கு அமைக்கலாம் என்பதைப்பற்றி முடிவு செய்ய வேண்டும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கல்லூரிப் படிப்பில் மாற்றம் வேண்டும் என்று பல காலமாகப் பேசப்பட்டிருந்தாலும் ஏறக்குறைய 10 ஆண்டு காலமாக இதிலே எந்தவிதமான முடிவும் ஏற்படாமல் ஆமை வேகத்தில் தான் நாம் சென்றுகொண்டிருக்கிறோம். ஏற்கனவே இருந்த இண்டர் மீடியட் முறையில் மாணவர்கள் சிறந்த முறையில் படித்தார்கள். அவைத் தலைவர் அவர்கள் கூட இண்டர்மீடியட் படித்தவர் என்று கருதுகிறேன். அவர்கள் ஒழுக்கத்துடனும், கட்டுப்பாட்டுடனும் இருந்தார்கள் (குறுக்கீடு). இப்பொழுது இருக்கும் முறையில் மாணவர்கள் அவர்களுடைய படிப்பை முடிக்க முடியாமல் இருப்பதன் காரணமாக மாணவர்களிடையே ஒருவித மான கலவரம் ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள இருக்கிறேன், உடனடியாக பல்கலைக்கழகத் துணைவேந்தர்களைக் கூட்டி அழைத்து, அடுத்த ஆண்டி லிருந்தாகிலும், இண்டர்மீடியட் இரண்டு ஆண்டு பட்டப் படிப்பு, மூன்று ஆண்டு ஹானர்ஸ் படிப்பு என்று ஏற்கெனவே இருந்ததைப் போல மீண்டும் தமிழகத்தில் வருவதற்கு உண்டான ஏற்பாடுகளைச் செய்வார் களா ?. அல்லது இதை இன்னும் ஐந்தாண்டு காலத்திற்குப் பேசிப்பேசி நீட்டிக்கொண்டே போகப்போகிறார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது முதலில் நான் விடை கூறியதுபோல் இதற்காக அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. கல்வித் துறையில் எந்த ஒரு மாற்றமும் ஏற்படுவதாயிருந்தால் திடீரென்று அடுத்த ஆண்டே எல்லா வகுப்புகளிலும் ஏற்படுத்திவிட முடியாது. பல்வேறு மாநிலங்களிலே 11 ஆண்டு பள்ளிப்படிப்பு, புகுமுகவகுப்பு, பிறகு பட்டப் படிப்பு 3 ஆண்டு என்று இருந்தது. பல மாநிலங்களிலே 10 ஆண்டு பள்ளி படிப்பு, இரண்டு ஆண்டு இண்டர்மீடியட் படிப்பு, மூன்று ஆண்டு கால பட்ட படிப்பு என்று ஆக்கியிருக்கிறார்கள். எப்படியிருந்தாலும், கூட 10 ஆண்டு ஆக்குவதற்கு, முதலாவது வகுப்பிலிருந்து தொடங்கி ஐந்தாவது வகுப்பு

வரை வரவேண்டும். பிறகு 6-வது வகுப்பிலிருந்து 10-வது வகுப்பு வரை வரவேண்டும். பிறகு இண்டர்மீடியட் வகுப்பை எடுத்துக்கொள்ள வேண்டும். ஆகவே, இந்த முறையை புகுத்துவதற்கே இரண்டு, மூன்று ஆண்டு காலங்கள் ஆகும். இதையெல்லாம் கல்வித் துறையினர், பல் கலைக்கழகத் துணைவேந்தர்கள் கூடி முடிவு செய்ய வேண்டும். அந்தக் கொள்கையை இப்பொழுது ஆராய்ந்து வருகிறோம். இந்தக் கொள்கையை இந்த ஆண்டு ஏற்றுக்கொண்டாலும் பல்கலைக்கழகத் துணைவேந்தர் களுடைய ஒப்புதலோடு, அதை எந்த வகையிலே படிப்படியாக கொண்டு வரவேண்டும் என்று முடிவு செய்ய வேண்டும். இண்டர்மீடியட் வகுப்பு அடுத்த ஆண்டே கொண்டுவர வேண்டும் என்றால் அதற்கு வேண்டிய பாட திட்டங்கள், ஸிலபஸ் அமைக்கப்பட்டு, அதன் அடிப்படையில் புத்த கங்கள் எழுதப்பட்டு, அச்சிட்டு வெளிவர வேண்டும். அந்த மாணவர் களுக்கு பயிற்சி கொடுக்கிற அளவுக்கு காலாகாலத்தில் வெளிவர வேண்டும். இதையெல்லாம் பல்கலைக்கழக துணைவேந்தர்கள் செய்ய வேண்டியிருக்கிறது. எவ்வளவு விரைவிலே கொண்டுவர முடியுமோ பல்கலைக்கழக துணைவேந்தர்களுடைய யோசனையைக் கேட்டு, தக்க நட வடிக்கை எடுத்துக்கொள்ள அரசு முயலும்.

DR. H. V. HANDE : Is it not a fact that for the past ten or fifteen years, the various Governments that have been sitting here on the executive side have been going on tinkering with the education system? Every year we have been given the impression that the three-year degree course will be replaced by four-year degree course and that pre-university would be converted into two-year intermediate course. All these confusions are taking place. Besides, in other States, also we are having different courses. Will it not be possible for this Government to get in touch with other States and have a national policy. Can this Goverment not tell the Centre that so far as education is concerned, there will be two-year intermediate course and two-year degree course or two year intermediate course and honours courses or whatever be the present system it would be followed permanently? Cannot this Government tell to Centre to have a perfect national uniform policy throughout India so that there will not be confusion between State to State and so students of this State would not be put to disadvantage when compared to students of other States ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது ஓரளவுக்கு எல்லா மாநிலங்களுடைய கருத்தும் ஒருவிதமாக இருக்க வேண்டும் என்ற கருத்து அடிப்படையில், மூன்று, நான்கு மாநிலங்களைத் தவிர மற்ற மாநிலங்களில் 10 ஆண்டு பள்ளிப் படிப்பு, இரண்டு ஆண்டு ஜூனியர் காலேஜ் படிப்பு, மூன்று ஆண்டு பட்டப் படிப்பு என்று வைத்துக் கொள்ளலாம் என்ற நிலைமை இருக்கிறது. அண்மையில் டெல்லியில் நடந்த கல்வி அமைச்சர்கள் மகாநாட்டில் 10 ஆண்டு பள்ளிப் படிப்பு, கல்லூரிப் படிப்பு, இரண்டு ஆண்டு இண்டர்மீடியட், 3 ஆண்டு பட்டப் படிப்பு எல்லா பல்கலைக் கழகங்களிலும் எல்லா மாநிலங்களிலும் கொண்டு வரப்பட வேண்டும் என்று எல்லா அமைச்சர்களும் ஏற்றுக்கொண்டிருக் கிறார்கள். அந்த அடிப்படையில் தான் நம்முடைய மாநிலத்திலும்

1972 டிசம்பர் 6]

யோசிக்கப்படுகிறது. ஒரு மாநிலத்திற்கும், மற்றொரு மாநிலத்திற்கும் வித்தியாசம் இல்லாத முறையில் இந்தக் கொள்கை கல்வி அமைச்சர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. எல்லா மாநிலங்களிலும் இதை நடைமுறையில் மேற்கொள்ள முயற்சி எடுத்துக் கொள்ளப்படுகிறது.

திரு. ஆ. பரந்தாமன் : பட்டப் படிப்பு 4 ஆண்டுகள் இருந்தாலும் 5 ஆண்டுகள் இருந்தாலும், வேலைவாய்ப்புக்களை தேடித்தருகிற கல்வியாக, ஜாப்-ஓரியண்டெட் கல்வியாக ஏற்படுத்த அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தக் கருத்து எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. அதற்கு ஏற்றபடி ஸிலபஸ் தயாரிக்க வேண்டும் என்ற கருத்து வழங்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் ஸிலபஸ் அமைக்கப்பட வேண்டும் என்று பல்கலைக் கழகங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. சொ. காவேரிமணியம் : இம்மாதிரி கல்வி ஆண்டுகளை நீட்டுவது, குறைப்பதைக் காட்டிலும், மாணவர்களுடைய மனநிலையை மாற்றுவதற்கு ஏதாவது இந்த அரசு கல்வி போதிப்பதற்கான முறையைக் கொண்டு வருவதற்கு முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சூழ்நிலையிலும் மாறுதல் வேண்டும், மாணவர்களுடைய மனநிலை கூட சரியாக இருப்பதற்கு. மாணவர்களைப் பொறுத்தவரையில் 5,6 ஆண்டு காலத்திற்கு பெற்றோர்கள்தான் ஆசிரியர்களாக இருக்கிறார்கள். பெற்றோர்களுக்கும் இதிலே பங்கு இருக்கிறது. சூழ்நிலையை எல்லோரும் சேர்ந்து மாற்ற வேண்டும். அந்த வகையிலே கல்வித் துறையில் எந்த முறைகளைக் கையாள வேண்டுமோ அந்த முறைகளைக் கையாளுவதற்கு வேண்டிய முயற்சிகளை கல்வித் துறையினர் மேற்கொண்டு வருகிறார்கள்.

* THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, this difficulty with regard to the duration of the educational course is found not only in colleges, but in High Schools also. In some States secondary education is 11 years and in some others it is 10 years. Nowadays, no State can remain isolated from other States and students go from place to place for education. May I know from the Hon. Minister for Education whether a uniform course for higher education would be formulated by this Government ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் முதலிலே சொல்லியபடி பக்கத்து மாநிலங்களில் 10 ஆண்டு பள்ளி படிப்பு இருப்பது போல தமிழகத்திலும் 10 ஆண்டு பள்ளிப் படிப்பை வைக்கலாம் என்ற எண்ணமிருக்கிறது. அத்துடன் இரண்டு ஆண்டு இண்டர்மீடியட் படிப்பும், 3 ஆண்டு பட்ட படிப்பும் எல்லா மாநிலங்களிலும் வைக்கப்படலாம் என்ற ஒரு கருத்தினை எல்லாப் பல்கலைக்

கழகத் துணைவேந்தர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தமிழகத்தி லும் அம்முறையை கடைப்பிடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படு கின்றன.

திரு. க. நாகராஜன் : தலைவரவர்களே, மருத்துவக் கல்லூரி, பொறி யியல் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு பரீட்சையில் தேர்வு பெறுவதற்கு வைவாவசி எக்சாமினேஷன் வைக்கப்படுவதால் அவர்கள் பயத்தினால் "ஸ்டிரைக்" போன்றவைகளில் ஈடுபடுவதில்லை. அதைப் போல மற்ற கல்லூரி மாணவர்களுக்கும் இந்த முறையை ஏற்படுத்தினால் அவர்களும் வேலை நிறுத்தங்களில் ஈடுபடமாட்டார்கள். எனவே அரசாங்கம் அதைப் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது அரசாங்கம் செய்யக்கூடியதல்ல. அது பல்கலைக் கழகத் துணை வேந்தர் களின் பொறுப்பு.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, கல்லூரிப் படிப்பை ஐந்தாண்டுக் காலமாக மாற்றினாலும், மதக் கல்வியும்—அதாவது அந்தந்த மாணவர்கள் சேர்ந்துள்ள மார்க்கத்தைப் பற்றிய கல்வியும் மாணவர்களுக்கு கற்பிக்கப்படுமா ? அவ்வாறு செய்தால் மாணவர்கள் மன அமைதி பெற்று, ஒழுங்காக படிப்பார்கள். அதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மார்க்க கல்வி போதிப்பதற்கு வழியில்லை. ஆனால் ஒழுக்க கல்வி கற்பிக்கப்படுகிறது. மாணவர்கள் ஒழுக்க நெறியில் சிறந்தவர்களாக வேண்டுமென்ற நோக்கத்துடன் வாரத்திற்கு ஒரு பீரியட், இரண்டு பீரியட் ஒழுக்கக் கல்வி போதிக்கப்பட்டு வருகிறது.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது கல்வி அமைச்சர்கள் மாநாட்டில், எல்லா மாநிலங் களிலும் ஒரே கல்விமுறை இருக்கவேண்டுமென்ற முறையில், பள்ளிப் படிப்பு 10 ஆண்டுகளாக இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். அப்படிச் செய்வதன் மூலம் ஏற்கெனவே 11 ஆண்டு காலம் படித்தவர்களுக்கும், எதிர்காலத்திலே 10 ஆண்டு படிப்பவர்களுக்கும் வித்தியாசம் ஏற்படுமே. அந்த வேறுபாடு இல்லாமலிருக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதற்கு இரண்டு மூன்று ஆண்டு காலம் ஆகும். உடனடியாக அந்த முறையை கொண்டுவர முடியாது. உடனடியாகக் கொண்டுவந்தால் அதிலே சில சங்கடங்கள் ஏற்படும். எனவே, கல்வி நிபுணர்களும், பல்கலைக் கழகத் துணை வேந்தர்களும் கலந்து சிறந்ததோர் முடிவினை மேற்கொண்டு, அதைப் படிப்படியாக செயல் படுத்த வேண்டும்.